தயாரிக்கப்படும் குறியீட்டெண்கள் மலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியவை. சென்னை நகரைப் பொறுத்தவரை, நுகர்வோர் விலைக்குறியீட்டெண்கள் புள்ளியல் துறையில் சேகரிக்கப்பட்டு, சிம்லாவில் உள்ள தொழிலாளர் நலத் துறை இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகின்றன.

[முற்பகல் 9-40]

அவரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், சென்னை நகரின் குறியீட்டு எண்கள் தமிழ்நாடு புள்ளியியல் துறை இயக்குநரால் வெளியிடப்படுகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மத்திய அரசின் பொது நிறுவனங்களில் இருப்பவர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் சென்னை நகரில் காஸ்ட் ஆஃப் இண்டெக்ஸ் கூடுதலாக இருக்கிறது என்றால் ஓரளவுக்குக் கூட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் மாநில அரசு நிறுவனங்கள் அல்லது ஊழியர்களுக்கு அந்த அடிப்படையில் அதற்கு 'ஈகுவல் பேரிட்டி' கொடுக்க இந்த அரசு முன்வருமா? பார்கெயின் கெபாசிட்டியைப் பொறுத்தது என்று சொல்கிறார்கள். கெபாசிட்டியைப் அதிகப் படுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

It is not only the bargaining Capacity but also the paying Capacity of the establishment that is invoeved.

சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் ஊதியம்.

* வினா எண்.552—திரு கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களின் சம்பளங்களை திருத்தி அமைத்து சம்பள உயர்வு கொடுக்க ஒரு ஆர்பிட்ரேஷன் மத்திய அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைஅரசு அறியுமா?

(ஆ) தமிழகத்தில் உள்ள சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களின் சம்பள கோரிக்கைகளை அந்த ஆர்பிட்ரேஷன்முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா ?

1979 மார்ச் 27]

(இ) இது குறித்து தமிழக அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) & (இ) : மத்திய அரசு அமைத்துள்ள நடுவர் குழு முன்பு சம்பந்தப்பட்ட சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்களும் முதலாளிகளும் தங்கள் கோரிக்கைகளை முன் வைக்கலாம் என்று அறிவித்ததன் மேல், இந்தியன் நேஷனல் சிமெண்ட் அண்ட் அல்லைட் பெடரேஷனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் அவர்களது கோரிக்கைகளை நடுவர் குழு முன்பு வைத்தனர். நடுவர் குழு 26—9—1978 அன்று தனது தீர்ப்பினை கொடுத்தது. இக்குழுவின் பரிந்துரைகளை நிர்வாகங்களால் அமுல்படுத்தப்படுவது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த நடுவர் குழுவின் முன்னால் இந்திய தொழிற்சங்க—அதாவது ஐ.என்.டி.யூ.சி.—இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் வேறு எந்தத் தொழுற்சங்கமும் கோரிக்கை வைக்கவில்லையா ? சாட்சியம் கொடுத்தது இல்லையா ? எந்தப் பிரதிநிதிகளும் அந்தக் குழுவின் முன் போனது இல்லையா ? அதைப்பற்றி அமைச்சரவர்கள் ஏதாவது ஆலோசித்துக் கேட்டுத் தெரிந்து கொண்டாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, என்னிடத்தில் இருக்கும் தகவலின்படி, இந்த ஒப்பந்தத்தின்படி மத்திய அரசு நடுவர் குழு முடிவிற்கு இந்தத் தொழில் தகராறினை அனுப்பியுள்ளது. நடுவர் குழுவில் திரு ஜி. ராமானுஜம் தொழிலாளர் சங்கப் பிரதிநிதியாகவும், ஆர். பி. நிவாடியா முதலாளிகளின் சங்கப் பிரதிநிதியாகவும் உள்ளனர் என்று தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டதகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால் பரிந்துரை என்ன என்ற தகவல் இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் ஆட்சி புரிகின்ற தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களுக்கு, இங்கிருந்து மற்றச் சங்கங்களின் சார்பாக, சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கம் உள்பட அந்தக் குழுவிற்கு முன்னால் பெங்களூர், பம்பாய் போன்ற இடங்களில் பல சந்தர்ப்பங்களில் சாட்சியம் அளித்தது தெரியாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். இப்பொழுது அந்தக் குழுவின் சிபாரிசு வந்திருப்பதைப் பல தொழிற்சாலை முதலாளிகள் அமலாக்காமல், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிப் பணத்தை, 'பேக் வேஜஸ்' கொடுக்க வேண்டியதை,

அரியர்ஸைக் கொடுக்காமல் தகராறு செய்யும் நிலையிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதைக் கொடுக்க வைப்பதற்கு இப்பொழுதாவது ஆர்பிட்டரேஷன் தீர்ப்பை முதலாளிக்கு பைண்டிங்என்ற முறையில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை நடவடிக்கைக்குக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மேற்சொன்ன தீர்ப்பை உடனடியாக நடை முறை செய்யாவிடில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வழங்கும், நவம்பர் மாதத்திற்கான ஊதியத்துடன் 1—10—1978 முதல் கொடுக்க வேண்டிய நிலுவை பாக்கியை (அரியர்ஸ்) சேர்த்துக் கொடுக்காவிடில் 11—12—1978 முதல் கால வரை யின்றி வேலை நிறுத்தம் செய்வதென சில தொழிற் சங்கங்கள் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து சிமெண்ட் நிறுவனங்களுக்கு அறிக்கை விடுத்தது. ஆனால் மேற்கண்ட வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. மேற்கொண்டு எழும் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்த வேலைகள்.

* வினா எண். 553— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைளிப்பாரா :

(அ) பொதுப்பணித்துறை-நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்த வேலைகள் கண்காணிக்க தாலூகா மட்டத்தில் அரசு குழு ஏதேனும் நியமித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) அரசு 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தாலூகா அளவிலான முன்னேற்ற ஆலோசனைக் குழுக்களை ஏறபடுத்த உத்தரவிட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையிலும், நெடுஞ் சாலை-ஊரகப் பணித் துறையிலும் வேலைகளின் முன்னேற்றத் தையும் தரத்தையும் ஆராயும். எங்கெங்கு தகுந்த தடுப்பு, நிவாரணவேலைகள் தேவைப்படுமோ அங்கங்கு அவை செயல்படும்